மகிழ்ச்சியான சிங்கம்

லூயிஸ் ஃப்பாடியா

படங்கள் - ரோஜர் துவைஸின்
தமிழில் - குமரேசன் முருகானந்தம்



மகிழ்ச்சியான சிங்கம்

There was once a very happy lion.

முன்பு ஒரு காலத்தில் மிகவும் மகிழ்ச்சியான சிங்கம் ஒன்று இருந்தது.

His home was not the hot and dangerous plains of Africa where hunters lie in wait with their guns; it was a lovely French town with brown tile roofs and gray shutters.

அதனுடைய வீடு, சூடான வெயில் கொளுத்தும், வேடுவர்கள் துப்பாக்கியுடன் காத்திருக்கும், ஆப்பிரிக்காவின் பயங்கரமான சமவெளி இல்லை. ஆனால், பழுப்பு நிற ஒடுகள் வேய்ந்த கூரைகளையும், சாம்பல் நிற கதவுகளுடன் கூடிய கட்டிடங்கள் உள்ள ஒரு அழகான பிரெஞ்சு நகரம்.



The happy lion had a house in the town zoo, all for himself, with a large rock garden surrounded by a moat, in the middle of a park with flower beds and a bandstand.

அந்த மகிழ்ச்சியான சிங்கத்திற்கு நகரத்தின் மிருக காட்சிசாலையின் ('ஜூ' வின்), பூந்தோட்டமும், இசை மேடையும் உள்ள பூங்காவின் நடுவில், ஒரு அகழி சூழ்ந்த பெரிய, பெரிய பாறைகளுடைய தோட்டத்தில் அதற்கே அதற்கான ஒரு வீடு இருந்தது.

Early every morning, Francois, the keeper's son, stopped on his way to school to say, "Bonjour, Happy Lion."

ஒவ்வொரு நாள் காலையிலும் பள்ளி செல்லும் வழியில் "ஹலோ, ஹாப்பி லயன்" என்று சிங்கத்தை வாழ்த்துவதற்காக, காப்பாளரின் மகன் பிராங்கோயிஸ், நின்று செல்வான்.

Afternoons, Monsieur Dupont, the schoolmaster, stopped on his way home to say, “*Bonjour, Happy Lion*.” Evenings, Madame Pinson, who knitted all day on the bench by the bandstand, never left without saying, “*Au revoir*, Happy Lion.”

பள்ளி ஆசிரியர், மிஸ்டர் டூபாண்ட், வீட்டுக்கு போகும் வழியில் அந்த சிங்கத்திற்கு "ஹலோ, ஹாப்பி லயன்" என்று சொல்வதற்காக மதியான வேளைகளில் நின்று செல்வார். நாள் பூராவும் இசை மேடை அருகிலிருக்கும் பெஞ்சில் உட்கார்ந்து பின்னிக் கொண்டிருக்கும் மேடம் பின்சன் "குட் பை, ஹாப்பி லயன்" என்று சொல்லாமல் போனதேயில்லை.

On summer Sundays, the town band filed into the bandstand to play waltzes and polkas. And the happy lion closed his eyes to listen. He loved music. Everyone was his friend and came to say “Bonjour” and offer meat and other tidbits. He was a happy lion.

கோடை ஞாயிறுகளில், நகர பேண்ட் வாத்திய குழு வால்ட்சும், போல்காவும் வாசிக்க இசை மேடைக்கு வந்துவிடுவார்கள். அந்த ஜாலியான சிங்கம், இசையை ரசிப்பதற்கு தனது கண்களை மூடிக்கொள்ளும். அது இசையை மிகவும் விரும்பியது. எல்லோரும் அதற்கு நண்பர்களாய் இருந்தனர். "ஹலோ" சொல்வதற்கும் மாமிசமோ அல்லது நொறுவைகளை கொடுப்பதற்கும் வந்தனர்.



One morning, the happy lion found that his keeper had forgotten to close the door of his house. “Hmm,” he said, “I don’t like that. Anyone may walk in.”
“Oh well,” he added on second thought, “maybe I will walk out myself and see my friends in town. It will be nice to return their visits.”

ஒரு நாள் காலையில், அந்த ஜாலியான சிங்கம், காப்பாளர் தன் வீட்டின் கதவை மூட மறந்துவிட்டார் என்று கண்டது.
"ம்ம்ம்...", "எனக்கு இது கொஞ்சமும் பிடிக்கவில்லை, யார் வேண்டுமானாலும் உள்ளே வரலாம்.” ஆனால் உடனே
"ஆஹா", "நான், தனியே வெளியே போய் டவுனிலிருக்கும் என் நண்பர்களை கண்டு வரலாம். அவர்களுடைய வருகைகளுக்கு நன்றியாக அவர்களைச் சென்று காண்பதும் சரியாகவே இருக்கும்" என்ற மாற்று எண்ணமும் சேர்ந்து கொண்டது.

So the happy lion walked out into the park and said, “Bonjour, my friends” to the busy sparrows. “Bonjour, Happy Lion,” answered the busy sparrows. And he said, “Bonjour, my friend” to the quick red squirrel who sat on his tail and bit into a walnut. “Bonjour, Happy Lion,” said the red squirrel, hardly looking up.

அதனால், அந்த ஜாலியான சிங்கம் பூங்காவினுள் பிஸியாக இயங்கிக்கொண்டிருந்த சிட்டுக் குருவிகளுக்கு ‘ஹலோ’ சொல்லியவாறு வீட்டை விட்டு வெளியே நடந்து சென்றது.
பிஸியான குருவிகளும் "ஹலோ, ஹாப்பி லயன்", என்று பதிலளித்தன.
தனது வாலின் மேலேயே உட்கார்ந்து கொண்டு வால்நட் கொறித்துக் கொண்டிருந்த, சுறுசுறுப்பான செவ்வணிலுக்கும் "ஹலோ, நண்பா" என்று கூறியது.
சற்றும் நிமிர்ந்து கூடப் பார்க்காமலேயே "ஹலோ, ஹாப்பி லயன்" என்றது அந்த செவ்வணில்.

Then the happy lion went into the cobblestone street where he met Monsieur Dupont just around the corner. "Bonjour" he said, nodding in his polite lion way. "Hoooooooooohhh ..." answered Monsieur Dupont, and fainted onto the sidewalk. "What a silly way to say bonjour," said the happy lion, and he padded along on his big soft paws.

தொடர்ந்து, ஜாலியான சிங்கம் , சரளைக் கற்கள் பதித்த தெருவிற்கு சென்றது, அங்கே, தெரு முனையில் திரு. டூபாண்ட் அவர்களை கண்டது. ஒரு சிங்கத்தின் பாணியில் தலையசைத்து அவருக்கு பணிவானதொரு 'ஹலோ' சொன்னது. திரு. டூபாண்ட் "ஹோ ஓஓஓஓஓஓஓ' என்று பதில் சொன்னவாறே நடைபாதையில் மயங்கி விழுந்தார். "ஹலோ சொல்வதில் என்னே ஒரு அல்பத்தனம் இது" என்று எண்ணியவாறு தனது மிருதுவான பாதங்களை எட்டி போட்டபடி ஜாலியான சிங்கம் நடந்தது.

‘Bonjour, Mesdames,” the happy lion said farther down the street when he saw three ladies he had known at the zoo. ‘Huuuuuuuuuuuuhhhhhh ...” cried the three ladies, and ran away as if an ogre were after them. ‘I can’t think,” said the happy lion, “what makes them do that. They are always so polite at the zoo.”

மேலும் தெருவில் செல்லும்போது, ‘ஜூ’ வில் (மிருககாட்சிசாலையில்) பார்த்த பெண்களை கண்டு "ஹலோ பெண்களே" என்று சொல்லிற்று.
"ஹமோவ்வ்வ்வ்வ்வ்வ்வ்..." என்று அலறியபடி மூன்று பெண்களும் ஏதோ ஓர் அரக்கன் அவர்களை விழுங்க பின்னே வருவது போல் ஓட ஆரம்பித்தனர்.
"என்னால் அனுமானிக்கவே முடியவில்லை" என்று சொல்லிக்கொண்டே, "ஜூ க்கு வரும்போது எப்போதுமே அவர்கள் மிகவும் நாகரீகமாகவே நடந்துகொள்பவர்கள் ஆனால் இப்பொழுது எது அவர்களை இப்படி நடந்து கொள்ளச் செய்கிறது. - என்று எண்ணியது ஜாலியான சிங்கம்.

“Bonjour, Madame.” The happy lion nodded again when he caught up with Madame Pinson near the grocery store.

“Oo la la ... !” cried Madame Pinson, and threw her shopping bag full of vegetables into the lion’s face.

“A-a-a-a-chooooooo,” sneezed the lion.

“People in this town are foolish, as I begin to see.”

“மாளிகைக் கடை அருகே மேடம் பின்சனை கண்டபோது மறுபடியும் தலையசைத்து, "ஹலோ மேடம்" என்றது.

"ஒஓஒஓ லா லா .... லா" என்று அலறியவாறு தன கையிலிருந்த காய்கறிகள் நிரம்பிய ஷாப்பிங் பையை சிங்கத்தின் முகத்தில் தூக்கி எறிந்தார் மேடம் பின்சன்.

"ஹா... ஆச்ச்சூ" என்று தும்மல் போட்டது சிங்கம்.

"இந்த நகரவாசிகள் முட்டாள்கள் என்பதை இப்பொழுதான் காணத் தொடங்குகிறேன்." என்று எண்ணிற்று.

Now the lion began to hear the joyous sounds of a military march.

He turned around the next corner, and there was the town band, marching down the street between two lines of people. Ratatatum ratata ratatatum ratatata boom boom.Before the lion could even nod and say, “Bonjour” the music became screams and yells. What a hubbub! Musicians and spectators tumbled into one another in their flight toward doorways and sidewalk cafes. Soon the street was empty and silent.

இப்போது சிங்கத்திற்கு படையின் அணிவகுப்பு இசை கேட்டது. அது இப்போது தெருவின் அடுத்த முக்கில் திரும்பியது, அதோ அந்த நகர இசைக்குழு, இரண்டு வரிசை மக்களுக்கு நடுவே அணிவகுத்து வருகிறது.

ரட்டம் ரட்ட ட்ட ட்ட ரட்ட ட்ட ட்ட பூம் பூம்.

சிங்கம் எப்போதும்போல் தலையசைத்து 'ஹலோ' சொல்லும் முன், இசை கூச்சலாகவும், அலறலாகவும் மாறியது.

என்ன ஒரு குழப்பம்! வாத்தியக்காரர்களும், பார்வையாளர்களும் அக்கம்பக்கத்தில் இருக்கும் தெருவோர கடைகளின் வாயில்களை நோக்கி ஓடும் போது ஒருவர் மீது ஒருவர் முட்டி மோதி விழுந்தனர்.

விரைவிலேயே, தெரு காலியாகி அமைதியானது.



The lion sat down and meditated. “I suppose,” he said, “this must be the way people behave when they are not at the zoo.”

Then he got up and went on with his stroll in search of a friend, who would not faint, or scream, or run away.

சிங்கம் உட்கார்ந்து தியானம் செய்ய தொடங்கியது.
"இந்த ஜனங்கள், ஜூ வில் இல்லாதபோது இப்படித்தான் நடந்துகொள்வார்கள் என்று நினைக்கிறன்" என்று சொல்லிக்கொண்டது.
மறுபடியும், தன்னைக் கண்டு மயங்கி விழாத, அலறாத, ஓடி ஒளியாத ஒரு நண்பரைத் தேடித் தனது நடையை தொடர்ந்தது.



But the only people he saw were pointing at him excitedly from the highest windows and balconies.

ஆனால், உயரமான ஜன்னலுக்குளிருந்தும் பால்கனியிலிருந்தும், பரபரப்பாக தன்னை சுட்டிக் காட்டும் மக்களையே கண்டது.



Now what was this new noise the lion heard? “Toootoooooot... hoootoooootooooot...” went that noise. “Hoooooot toooooo TOOOOOOOOOHHHOOOOT ...” and it grew more and more noisy. “It may be the wind,” said the lion. “Unless it is the monkeys from the zoo, all of them taking a stroll.”

இப்பொழுது, இது என்னவொரு புது சப்தம் சிங்கம் கேட்பது? "டிங் டிங் டிங் ...." சப்தம் தொடர்ந்தது "டிங் டிங் டிங் ...." சப்தம் மென்மேலும் அதிகரித்தது. "இது காற்றின் வேலையாக இருக்க வேண்டும்" என்று சொல்லிக்கொண்டது. "இல்லாவிட்டால் ஜூ-விலிருக்கும் அந்த குரங்குகளாக இருக்கும். அவை எல்லாம் ஒன்று சேர்ந்து இங்கு உலாவ வந்திக்கிறது போலும்"

All of a sudden a big red fire engine burst out of a side street, and came to a stop not too, too far from the lion. Then a big van came backing up on the other side of him with its back door wide open. The lion just sat down very quietly, for he did not want to miss what was going to happen.

The firemen got off the fire engine and advanced very, very slowly toward the lion, pulling their big fire hose along.

திடீரென்று, பெரிய சிவப்பு தீயணைக்கும் வாகனம் ஒன்று, பக்கத்துக்கு தெருவிலிருந்து, சட்டென வேகமாக வந்து சிங்கத்திற்கு வெகு தொலைவில் இல்லாத தூரத்தில் நின்றது. மற்றொரு பக்கத்தில் வேறு ஒரு வாககனம், பின் கதவுகள் திறந்த வண்ணம் பின்புறமாக வந்துகொண்டிருந்தது. நடக்கப்போவதை காணும் வாய்ப்பை இழக்க விரும்பாததால், சிங்கம் வெகு அமைதியாக உட்க்கார்த்திருந்தது.



Very slowly they came closer... and closer... and the fire hose crawled on like a long snake, longer and longer . . . SUDDENLY, behind the lion, a little voice cried, “Bonjour, Happy Lion.”

தீயணைப்பு வீரர்கள் வாகனத்திலிருந்து இறங்கி, நீண்ட தண்ணீர் பீய்ச்சும் குழாயை இழுத்துக்கொண்டு மெது மெதுவாக சிங்கத்தை நோக்கி நெருங்கினர்.
மிகவும் மெதுவாக அவர்கள் நெருங்கி… நெருங்கி வந்து கொண்டிருந்தனர்.
தண்ணீர் குழாயும், நீளமாக... மேலும் நீளமாக, ஒரு நீண்ட பாம்பு போல ஊர்ந்து வந்து கொண்டிருந்தது.
எதிர்பாராத விதமாக, சிங்கத்திற்கு பின்னாலிருந்து, வீச்சென்று ஒரு சிறு குரல் "ஹலோ, ஹாப்பி லயன்" என்று கூவிற்று.

It was Francois, the keeper's son, on his way home from school! He had seen the lion and had come running to him. The happy lion was so VERY HAPPY to meet a friend who did not run and who said "Bonjour" that he forgot all about the firemen.

அது, பள்ளியிலிருந்து திரும்பிக்கொண்டிருந்த காப்பாளரின் மகன், பிராங்கோயிஸ். அவன் சிங்கத்தை பார்த்து விட்டான், சிங்கத்தை நோக்கி ஓடோடி வந்து கொண்டிருந்தான்.

தன்னை கண்டு ஓடாத, 'ஹலோ' சொன்ன, தன் நண்பனை கண்டதும், தீயணைக்கும் வீரர்களையும் மறந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தது ஹாப்பி லயன்.

And he never found out what they were going to do, because Francois put his hand on the lion's great mane and said, "Let's walk back to the park together."

"Yes, let's," purred the happy lion.

மேலும், பிராங்கோயிஸ் அதன் பெருத்த பிடரியில் கை வைத்து "வா, நாம் பூங்காவிற்கு திரும்ப நடக்கலாம்" என்று சொன்ன பிறகு, அது அவர்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்று கண்டுகொள்ளவேயில்லை. " ஆம், போகலாம்" என்று ஒரு சிறு உறுமல் உறுமியது ஜாலியான சிங்கம் (ஹாப்பி லயன்).

So Francois and the happy lion walked back to the zoo. The firemen followed behind in the fire engine, and the people on the balconies and in the high windows shouted at last, “BONJOUR! HAPPY LION!”

அதனால், பிராங்கோயிஸும், ஹாப்பி லயனும், ஜூ வை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள். தீயணைப்பு வீரர்களும் தீயணைப்பு வாகனத்தில் பின் தொடர்ந்தனர். பால்கனியிலிருந்தும், உயரமான ஜனங்களிலிருந்தும் இப்பொழுது "ஹலோ, ஹாப்பி லயன்" என்று கூக்குரலிட்டனர் மக்கள்.

From then on the happy lion got the best tidbits the town saved for him. But if you opened his door he would not wish to go out visiting again. He was happier to sit in his rock garden while on the other side of the moat Monsieur Dupont, Madame Pinson, and all his old friends came again like polite and sensible people to say “Bonjour, Happy Lion.” But he was happiest when he saw Francois walk through the park every afternoon on his way home from school. Then he swished his tail for joy, for Francois remained always his dearest friend.

அப்போதிலிருந்து, ஹாப்பி லயன், நகர மக்கள் சேர்த்துவைத்த சிறந்த நொறுவைகைகள் கிடைக்கப்பெற்றது. ஆனால், ஜாலியான சிங்கம் நீங்கள் கதவை திறந்து வைத்தாலும் மறுபடியும் வெளியே சென்று நகரைக் காண விரும்பியதில்லை. அது, தனது பாறைகளினாலான தோட்டத்திலே அமர்ந்திருக்கும்போதும், அகழிக்கு மறு பக்கத்திலிருந்து திரு. டுபாண்ட், மேடம் பின்சன், மற்றும் அனைத்து நண்பர்களும் முன்னெப்போதும் போல வந்து நாகரீகமாகவும், விவேகமாகவும் "ஹலோ, ஹாப்பி லயன்" என்று வாழ்த்துவதில் மேலும் மகிழ்வுற்றது. ஆனால், தினந்தோறும் மதியம் பள்ளியிலிருந்து வீடு திரும்பும் போது பூங்காவினுள் வரும் பிராங்கோயிஸை பார்க்கும்போது மட்டுமே மட்டற்ற மகிழ்ச்சியடைந்தது. அப்பொழுது தன் வாலை வீசி வீசி ஆட்டி தனது பெரும் மகிழ்ச்சியை காட்டும், ஏனென்றால் எப்பொழுதுமே பிராங்கோயிஸ் மட்டுமே அதன் மிகவும் பிரியமான தோழன்.